www.padippakam.com

# கவிஞர் மதுபாலிகா

மதுபாலிகா. மயக்கம் தெளிவிக்கும் மாற்று மருந்து எழுத்துக்காரர். அமிலத்தை விழுங்கி, அஸ்திரத்தைக் கொப்புளிக்கும் அனற் கவிஞர்.

வலம்புரி ஜான்


*('புதிய கீதை' விமர்சனம்)*

மதுபாலிகாவின் கவிதைகள் மனிதம் சார்ந்தவை. ஜீவிதத்தை ரூபப்படுத்தும் வர்க்கப் போரில் தன் பங்கை உணர்ந்து கவிதைகளை ஆக்கியுள்ளார். ஒரு தலைமுறை எரிமலையாய்க் கனன்று கொண்டிருக்கும் வேளையில் மதுபாலிகாவின் கவிதைகள் கவிதாயுதமாக வெளிப்பட்டிருக்கின்றன.

சே. சேவற்கொடியோன்

தாகூரின் கவிதைகளைக் குளிர்காலக் காற்றின் இதமான வருடல் என்று எஸ்ரா பவுண்ட் கூறினன். மதுபாலிகாவின் கவிதைகளோ புயல் வீசும் கடலின் அலை வீசும் வேகத்தையே உணர்த்துகின்றன.

ஆ. ஜெகந்நாதன்



www.padippakam.com

## நன்றி

- கல்கி, தினமணிக்கதிர், உயிர்மெய், தீபம்.

# வர்க்க பேதத்தைச் சுட்டுப் பொசுக்குவோம்!

அஸ்வமேதயாக வெற்றிக்காக கழுதைகளை நம்பிக் கொண்டிருக்கும் நாடு இந்தியா!

நிலமற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட ஏழைமக்கள் 'உபரி நிலங்களை பங்கிட்டுக் கொடு' என்று ஊர்வலம் சென்றால் தடுக்கும் நாடு இந்தியா!

'நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்கச் சொன்னால் சுட்டுத் தள்ளுவோம்' என்று துப்பாக்கிகளுடன் ஊர்வலம் செல்லும் நிலப்பிரபுக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் நாடு இந்தியா!

தேசவிடுதலைக்காக என்றோ ஒரு குடும்பம் செய்த தியாகத்திற்காக தேசத்தையே அந்தக்குடும்பத்திற்கு தாரை வார்த்துக் கொடுத்த தர்மரோஷமற்ற மக்களைக் கொண்ட நாடு இந்தியா!

அசோகனின் தர்மச்சக்கரத்தை தேசியக்கொடியில் பதித்துவிட்டு, சோகத்தையே சொந்தமாக்கிக் கொண்டு

படிப்பகம்

www.padippakam.com

ன பின்னல் மலடாக்கும் அரசியல்வாதிகளைக் கொண்ட ன்மீக பூமி இந்தியா!

சோஷலிஸ நாடுகளில் ஒரு குழந்தை பிறந்தால் ண்டு கைகள் பிறந்திருப்பதாக களித்து மகிழ்ந்திருக் போது 'ஒரு வயிறு பிறந்திருக்கிறதே' என்று வருந் ம் வளமார்ந்த தேசம் இந்தியா!

மனித மகத்துவங்களை மக்கிப் போகச் செய்கின்ற கல்வி றைகளால் புதிய சிந்தனைகள் பூக்கவிடாமல் பார்த்துக் ாள்ளும் அறிவாளர்களைக் கொண்ட அன்னைபூமி ந்தியா!

தேசத்தையே சிறைச் சாலையாக்கும் சட்டத் திரட்டுக ல் மக்களுக்கு நியாயங்களை புரிய வைக்கும் புண்ணிய மி இந்தியா!

நவீன கலை இலக்கியம் என்ற பெயரால் இரத்தம் சிந் த கொலைகளைச் செய்யும் குரூரர்களைக் கொண்ட நாடு ந்தியா!

இந்தக் கொடுமைகளின் கொடியேற்றத்தோடு மக்க ர்ட்சி நடைபெறுவதாக நம்பச் சொல்பவர்கள் ஆள் ன்ற நாட்டில் மக்களது பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி மர்சிக்கவும், மாற்றுச் சொல்லவும் ஆற்றல்மிக்க ஞான ரங்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் உருப் ற்றன. ஆனல் தமிழகத்தில் மட்டும் குறிப்பிடத்தக்க ழர்ச்சியைக் காணமுடியவில்லை.

தமிழ்க்கவிஞர்கள் பலரும் வாழ்க்கைக்குரிய கனபரிமா ங்களை பெறுவதற்கு முனையாமல் கனவுகளைப் பற்றிக் ாண்டும், அவமானகரமான சோகங்களுக்கு ஆட்பட் ம் அவைகளையே சுகமான கவிதைகளாக சொறிந்து

பகலிலும் அஸ்தமன விகாரங்களில் வாய் பதித்துக் கிடக் கிறார்கள்.

இந்த இழிநிலைகளே இந்த மண்ணின் எச்சமாக மாறி விடுமோ என்ற அச்சத்தின் வசப்பட்டிருந்த வேளையில் நம் பிக்கையின் பிரகாசக் கிரணங்களோடு வெளிப்பட்டவர் கவிஞர் இன்குலாப்.

மனித இனத்தின் மானஸ்தானங்களுக்கு எங்கு சேதம் நிகழ்ந்தாலும் புரட்சிக் கொடியை தனது எழுத்துக்களால் உயர்த்திப் பிடித்து வாழ்க்கைப் போரில் நியாயங்களுக்கு மானம் சேர்ப்பவர் இன்குலாப்.

ஜனசமூகத்தின் சௌந்தர்யத்தை, சஞ்சலத்தை அவர் மட்டுமே இதயத்தால் எழுதிக் கொண்டிருக்கிறார். இன் குலாப்பின் சமூகச் சிந்தனையை, மனித உணர்ச்சியை ஒட் டிக் கவிபாடும் சிலரும் தமிழில் வளர்ந்து கொண்டிருப் பதைக் காணமுடிகிறது. அவர்களுள் ஒருவரான கவிஞர் மதுபாலிகா சில ஆண்டுகளுக்குமுன் 'புதிய கீதை'யை உப தேசித்தார். இப்போது 'அஸ்வமேதயாகம்' நடத்து கிறார். வாழ்க்கைப் போராட்டத்தில் ரத்தம் சிந்துகின்ற சகோதரர்களுக்கு மனசாட்சியில் மலர்ந்து மணக்கின்ற மலர்களை சூட்டத் துடிக்கின்றார். சிறகு கொண்டு ஜீவிதம் நாடிப் பறக்கின்ற ஒரு வானம்பாடியைப் போல் தனது கவிதா எல்லைகளை விரிவாக்கிக் கொண்டு

'சுவடுபட்ட மண்ணெல்லாம்
சிவப்பாகும் எண்ணங்கள்
அவனியினை எமது கொடி
ஆளும், விலகி நில்லுங்கள்!'

என்ற பிரகடனத்தோடு கவிதையைத் தொடங்குகிறார்.

படிப்பகம் எந்தக் குற்றமும் செய்தறியாத ஐந்து கோடி மக்க ளைக் கொன்று குவித்து உலகை ஒரு குடைக்கீழ் ஆளத்

www.padippakam.com

பொதுவுடைமைத் தத்துவம் உலகை சிவப்பாக்கிக் கொண்டிருப்பதை முன்னறிவிக்கும் கவிதையாக முதற்கவிதையை பாடியிருக்கிறார்.

விதிக்கு எதிரான சக்தி இல்லை என்று எல்லாவற்றோடும் சமரசம் காணும் இழிதகைமையையே நம்மக்கள் வாழ்க்கை நெறியாக வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். 'இந்த மண்ணை ஆக்கிப் படைத்த மக்களின் வறுமைக்கும் அறியாமைக்கும் காரணம் இறைவன் வகுத்த விதியென்றால் விதித்தவனை மிதிப்பேன்'' என்றான் புரட்சிக் குயில நஸ்ருல் இஸ்லாம்.

கவிஞர் மதுபாலிகாவும் விதியின் பெயரால் நம்மை ஏமாற்றி வாழ்பவர்களையும், ஆள்பவர்களையும் அடையாளம் காட்டுகிறார்.

இது ஆண்டவன்
வகுத்ததல்ல;
நம்மை
ஆள்பவன் வகுத்தது!
இதற்கு
பலியாவது
தீர்வு அல்ல
நாம் ஆள்வதே
வழி; உணர்க!

என்று அறைகூவல் விடுக்கிறார். உடைமை வர்க்கமும் ஆளும் சக்திகளும் உழைப்பிற்கும் அதன் பயன் பாட்டிற்குமுள்ள இடைவெளியை விரிவாக்கி உழைக்கும் மக்களை 'இதுதான் விதி' என்று நிரந்தரமாக வீழ்த்தியிருக்கிறார்கள். இந்த வீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும் காரணமானவர்களை இனம் காட்டி பொய்ம்மை களைந்து புதுயுகம் படைக்க விரும்புகிறார்.

அடிமைத்தனத்தின் சகல அர்த்தங்களோடும் வாழ்கின்ற மக்களைக் கொண்ட 'சுதந்திர' இந்தியாவின் ஜனநாயகப் பாராளுமன்றம் இந்திய மக்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் கொள்ளைக்கூடமாக மாறிவிட்டது. முதலாளித்துவத்தின் எடுபிடிகளாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் எதேச்சாதிகார சக்திகள் மக்களின் சுதந்திரத்தை துவம்சம் செய்வதைக் கண்டு சீற்றம் கொண்ட கவிஞர்,

பாராளுமன்றத்தின் பக்கத்தில்
பளிங்குக் கல்லறை எழுப்பி
அதன் மீது எழுதுங்கள்—
'இந்திய சுதந்திரம்
இங்கே துயில்கிறது'

என்று பாடுகிறார். வந்தவரெல்லாம் வெற்றிகொண்ட வரலாற்றிற்குச் சொந்தமாகிச் சரித்திரங்களின் சுடுகாடாகக் காட்சி தரும் டெல்லியில் பாராளுமன்றத்தின் பக்கத்தில் சுதந்திரத்திற்குக் கல்லறை எழுப்பும் சரியான சிந்தனையை கவிதைப் படுத்தி இருக்கிறார். வருகின்ற தலைமுறை இந்திய ஜனநாயகத்திற்கு எழுதப் போகும் சத்திய சாசனம் இப்படித்தான் அமையப் போகிறது.

'தகிக்கின்ற உந்தன் கண்ணீர் கோகினூர்' என்று பாடினான் மலையாளக் கவிஞன் ரமேஷ் நாயர். தேவைகள் அனைத்தையும் தெய்வீகமாகக் கருதி மயங்கும் சரீரருசிக்காரர்கள் தமிழில் அதிகரித்திருக்கிறார்கள் ஒருத்தியின் உறவிற்காக உயிரை, தசையை உருக்கிக் கண்ணீர்ப் பூக்களை சிந்தியபடியே ''இந்த வீதியில்தான் என் விலாசம் தொலைந்து விட்டது'' என்று வீதி வீதியாகப் பெண்ணிற்கலையும் தெருப் பொறுக்கிகளும், மேடையில் பாரதியின் புதுமைப் பெண்ணைப் பாடிக் கைதட்டல் பெற்றுவிட்டுச் சொந்த வாழ்வில் கவர்ச்சி காட்டி மயக்கி இழுக்கும் 'இலக்

படிப்பகம்

www.padippakam.com

'தெய்வீகமானது என்றல்ல
தேவையானது காதல்'
என்றுதான்
உன்னை விரும்புகிறேன்.

என்று வாழ்க்கையை அதன் இயல்புகளோடு பார்த்துப் பந்தப்படுத்தி ஸ்பர்சிக்கின்ற அறிவார்ந்த காதலைப் பாடுகிறார்.

ஆணுக்குப் பெண்ணும்
பெண்ணுக்கு ஆணுமே
லட்சியமாய் இருந்த
காதல்கள் தோற்றிருக்கலாம்!
போராட்டப் பாதையை
பொதுவான லட்சியமாய்
கொண்டுள்ள நம்முறவு
வெற்றியைத் தவிர
வேறெதனை முத்தமிடும்!

என்று பெருமிதம் கொள்கிறார். சமுதாய லட்சியம் நிறைந்த காதல் தோற்பதில்லை என்பதைச் சொல்லும் முறையில் மற்ற கவிஞர்களிடமிருந்து வேறுபடுகிறார்.

இந்திய ஜனநாயக
அரசின் ஆட்சியில்
ராணுவம் தீர்க்காத
பிரச்சினையே இல்லை!
கோவிலைக் கழுவி
புனிதப் படுத்தி
கொள்கைப் போர்களை
அடக்குவது வரை!

டத்தை சிருஷ்டிப்பதற்காக இரத்தமே பூமியின் மணமாகும் அளவிற்கு சீக்கிய சகோதரர்கள் இரத்தம் சிந்தியிருக்கிறார்கள். சாம்பிராணி மணக்கின்ற பஞ்சாப்பில் எதேச்சாதிகார துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது. எனினும் அவர்களின் மரணத்திலிருந்து உரிமைப் பேரொளி பெருகும். சிரைகளிலும் தமனிகளிலும் வீரத்தை நிரப்பிக் கொண்டிருக்கும் சீக்கிய சகோதரர்கள் தங்களது உரிமைப் போரில் அடைகின்ற வெற்றியே தேசிய இனங்களின் வெற்றிக்கு வழிவகுக்கும்.

ரோகம் நிறைந்த சமூக அமைப்பைச்சாடி மிதிக்கும் 'அஸ்வமேத யாக' முடிவில்,

''......இடிமுழக்க ஒலியோடு
சிலிர்த்து எழப்போகும்
புரட்சிப் புரவியிது
சிவப்புக் கம்பளத்தில்
உவப்ப அடிபதிக்கும்
பொதுமை வீதிகளில்
புதியதொரு உலா வரும்
எதிர்த்து நிற்போரின்
இடுப்பைப் பொடியாக்கும்
எல்லா யுகங்களுக்கும்
வென்று பகைமுடிக்கும்''

என்று மானிட மன உள்ளோட்டங்களை உணர்ந்து சமூக நீதிக்கு தளம் அமைக்கிறார்.

கவிஞர் மதுபாலிகாவின் கவிதைகள் மனிதம் சார்ந்தவை. ஜீவிதத்தை ரூபப்படுத்தும் வர்க்கப்போரில் தன் பங்கை உணர்ந்து கவிதைகளை ஆக்கியுள்ளார். ஒரு தலைமுறை எரிமலையாய்க் கனன்று கொண்டிருக்கும் வேளையில் ... கவிதைகள் கவிதாயுதமாக வெளிப்பட்டி...

படிப்பகம்

www.padippakam.com

# ‘அஸ்வமேத யாகம்’ - ஒரு மதிப்பீடு

கண்ணுக்கு முன்னால் விரிந்து கிடக்கும் நிஜமான உலகினைப் புறக்கணித்துவிட்டுக் கனவு வெளிகளில் வலம்வரும் கவிஞர்களின் படைப்பால் ஆக்கங்கள் விளைவதில்லை. கற்பனை, நளினம் என்ற பெயர்களில் அவர்கள் உருவாக்கும் சொற்குவியல்கள் காற்றுக் குமிழிகளைப் போல் வலிமையற்று உதிர்ந்து வீடுகின்றன. சமுதாய அவலங்களைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல், எப்படியாவது ஒரு கவிஞனாக முத்திரையிட்டுக் கொள்ள வேண்டும் என்ற ஆவலில் ரசனைக்காகப் பாட்டெழுதுவது ஒரு வகைச் சுயநலமே.

சிறந்த கவிஞர்கள் தங்களுக்குக் கிடைக்கும் பாராட்டைவிட, தங்களது படைப்புக்களால் சமுதாயம் பெறும் பயன்பாட்டையே பெரிதாக மதிப்பார்கள். அத்தகைய சிறந்த கவிஞராக மதுபாலிகாவை, ‘அஸ்வமேதயாகம்’ அடையாளம் காட்டுகிறது.

தமிழில் புதுக்கவிதை நூல்கள் நிரம்ப வரும் காலம் இது. அவற்றின் எண்ணிக்கைக்குத் தகுந்த அளவு தரம் இல்லை என்ற குற்றச்சாட்டுக்கு அவை ஆளாகியுள்ளன.

அண்மையில் வெளிவந்துள்ள புதுக்கவிதை நூல்களில்

படைப்புத்திறன் எதுவுமில்லாமல் பிறரைப் பார்த்து நகலெடுக்கும் போலிகள், கருத்துத் தெளிவு எதுவுமில்லாமல் உல்லாசத்தோடு கிறுக்குகின்ற குழப்பவாதிகள், பொறுப்புணர்வு எதுவுமில்லாமல் வக்கிரங்களை வாரியிறைக்கும் விஷமக்காரர்கள் முதலானவர்களுக்கும் தமிழகத்தில் கவிஞர்கள் என்ற விருது பெருந்தன்மையால் வழங்கப்பட்டுள்ளது. பொய்கள் மண்டிக் கிடக்கும் இடத்தில் நிஜத்தைச் சிரமபப்பட்டே கண்டு பிடிக்க வேண்டும்.

சீரழிவுகளைக் கண்டு பிடரி சிலிர்த்தெழுந்து பாயும் ‘அஸ்வமேதயாகம்’ நடபபுலகின் போக்கை மாற்ற விரும்பும் போர்க் குரலாகவும், சத்தியத்தைத் தரிசிக்கும் கவிஞரின் ஆன்மக் குரலாகவும் ஒலிப்பதை அறியும் போது மகிழ்ச்சி பிறக்கிறது.

தாகூரின் கவிதைகளை ‘குளிர்காலக் காற்றின் இதமான வருடல்’ என்று எஸ்ராபவுண்ட் கூறினான். மதுபாலிகாவின் கவிதைகளோ புயல் வீசும் கடலின் அலைவீசும் வேகத்தையே உணர்த்துகின்றன. இன்று புதுக் கவிதை எழுதுவதில் அதிக விளம்பரம் பெற்றுள்ள கவிஞர்கள் பலருக்கு இல்லாத துனிவு இவருக்கு இருக்கிறது. அதிகார வர்க்கத்துக்கு அஞ்சாத மனச்சாட்சியின் குரலாகப் பல கவிதைகள் ஒலிக்கின்றன. எம். எல. ஏ. வீட்டுக் கூரையில் தொங்கிய அரிசனப் பெண், மங்கையைக் கடத்திய மந்திரியின் அட்டுழியம், காவல் நிலையத்தில் கற்பழிப்பு—என்று அன்றாடப் பத்திரிகைச் செய்திகளாகிவிட்ட அவலங்களைப் பட்டியல் போட்டுச் சீறுகிறார் கவிஞர்.

“பாராளுமன்றத்தின் பக்கத்தில்
பளிங்குக் கல்லறை எழுப்பி
அதன் மீது எழுதுங்கள்,

படிப்பகம்

www.padippakam.com

என்ற வரிகளில் கனியும் கோப நெருப்பை ஊதி வளர்த்தால் தனியுடைமை எரிந்து சாம்பலாகும்.

'இன்றைய அரசியல், சமுதாயச் சிக்கல்களைச் சாடும் மதுபாலிகாவின் கவிதைகளில் மெல்லிய ஒரு நையாண்டி இழையோடுகிறது. எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் யாருடைய 'சினத்துக்கு ஆளானாலும் கவலையில்லை என்ற துணிவோடு இவர் பாடுவது சிறப்பானது.

''தவறியும் கூட
யோக்கியன் எவனும்
உள்ளே நுழையாதவாறு
கட்டுக்காவலை
பலப் படுத்துங்கள்''

என்று நமது நிலையை விமர்சிக்கிறார். பல கவிஞர்களுக்கு இந்த அஞ்சாமை இல்லை. வியட்நாம் போரையும், நீக்ரோக்கள் அவதியையும் பற்றியெல்லாம் வருந்திப் பாடும் கவிஞர்கள் உள்ளூர் அக்கிரமங்களைக் கண்டு மட்டும் பாராமுகமாக இருந்துவிடுவதுண்டு. 'சமுதாயப் பிரக்ஞை என்பது ஆபத்தில்லாத திசைகளில் மட்டுமே அவர்களுக்கு உதிக்கும். இத்தகைய 'சுயபாதுகாப்பு'ணர்ச்சியே பல கவிஞர்களின் பரிமாணத்தைக் குறைத்துச் சிதைத்திருக்கிறது. மதுபாலிகா இந்தப் பலவீனத்தை வென்றிருக்கிறார்.

தெளிவான இலக்கும் தேவையான உறுதியும் கவிஞரின் வலிமை. நூல் முழுவதிலும் இவ்வலிமை காணப்படுகிறது.

''அதிகாரம் வேல் பாய்ச்ச
– அவதரித்த குருதியின்
அடங்காத வேகம் நான்''

என்ற சுய அறிமுகமும்,

''வல்லினமாய்
நிமிர்ந்து நீ போராடு''

என்ற வழிகாட்டலும்,

''நியாய விலைக் கடையில்
இனி எம். எல். ஏ. சப்ளைக்கும்
ஏற்பாடு செய்யுங்கள்''

என்ற அரசியல் விமர்சனமும்,

''தெய்வீகமானது என்றல்ல
தேவையானது காதல்'
என்றுதான்
உன்னை விரும்புகின்றேன்''

என்ற எதார்த்தப் போக்கும்,

''வயலுக்கு என்னோடு
துணைவந்த கால்கள்
ஜெயிலுக்கு வரவும்
சித்தமாய் இருக்கட்டும்''

என்ற புதுமையான காதல் பிரகடனமும் மதுபாலிகாவின் இலட்சியத்தைக் கவித்துவத்தோடு வெளிப்படுத்துகின்றன. கருத்துக்கள் எந்தக் குறுக்குச்சுவரானாலும் தடுக்கப்பட்டு இருண்மையாகி விடாமல் படிப்பவரைச் சேர்கின்றன.

நூலின் பெயரில் உள்ள கவிதை வர்க்கப் போர்ப் பிரகடனமாக அமைகிறது. சமதர்மம் யாசித்துக் கிடைக்கக் கூடியதல்ல; குருதியைத் தாரை வார்த்து நடத்தும் புரட்சி வேள்வியில் தான் அது கிட்டும் என்பதை மதுபாலிகா விளக்குகிறார்.

''சிவப்புக் கம்பளத்தில்
உவப்பு அடிபதிக்கும்

படிப்பகம்

www.padippakam.com

பொதுமை வீதிகளில்
புதியதொரு உலாவரும்''

என்றஅறிவிப்பில் கவிஞரின் வேட்கை வெளிப்படுகிறது.

இவ்வாறு எதார்த்த உலகினை நோக்கிப் பெற்ற உணர்வுகளைக் கவிஞர் வெளியிடுகிறார். மானுட மேன்மையே இலட்சியமாய்த் தோன்றும் இந்த நூலில் ''இசைதல்'', மஞ்சள் புனையும் மாக்கள்' 'சமநீதி'—முதலானவை ஆற்றல் குறைந்து காணப்படுகின்றன.

கவிதைகளனைத்தும் எந்தப் பகட்டுமின்றி வருகின்றன. கருத்துக்களின் வலிமையே அவற்றின் அழகு. சமுதாய மாற்றத்துக்காகப் பாட விரும்பும் ஒரு மக்கள் கவிஞனாக மதுபாலிகாவை இந்நூல் உணர்த்துகிறது. சுருக்கமாகச் சொன்னால், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பயன்படுவதைவிட அதிகமாக மானுட மேம்பாட்டுக்கு இந்நூல் பயன்படும்.

**ஆ. செகந்நாதன்**

## தீர்மானம்

பவனிவரும் கவிதைக்கு
பதிலிருந்தால் சொல்லுங்கள்
பாய்ந்து வரும் குதிரையிது
பாதைவிட்டு விலகுங்கள்
இதன்
சுவடுபட்ட மண்ணெல்லாம்
சிவப்பாகும் எண்ணங்கள்
அவனியினை எமது கொடி
ஆளும்; விலகி நில்லுங்கள் !

படிப்பகம்